**தேசிய பாதுகாப்பு நிதியம் - 2017**

---

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியததின் நிர்வாக நடவடிக்கைகள் மீதான எனது அறிக்கை பின்வரும் பந்திகளின் கீழ் உள்ளடக்கப்பட்ட நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. வருமான மற்றும் செலவினக்கூற்றானது இணைப்பு 01 ஆகவும் பண முதலீட்டுக் கூற்று இணைப்பு 02 ஆகவும் காட்டப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச்சட்டத்தில் திருத்தப்பட்டவாறான 1991 இன் 10 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதி அமைச்சின் செயலாளருக்கு பாராளுமன்றத்தில் அறிக்கையிடப்படும் என்பதுடன் அதற்கிணங்க, நிதி அமைச்சின் செயலாளர் அத்தகைய நிதிக்கூற்றுக்களை தயாரித்து அமைச்சரின் அனுமதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பார். இருந்தபோதிலும், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முறையான அனுமதியில்லாமல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் இரண்டு உத்தியோகத்தர்களின் கையொப்பத்துடன் 2018 மார்ச் 26 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவ பொறுப்பின் உறுதிப்பாடு 2007 இன் ஒக்தோபர் 02 ஆந் திகதிய பீஈடீ/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையினை பின்தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

உரிமை மாற்றங்கள் கூற்றானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம், மூலதனச் சொத்தின் நியாயப் பெறுமதியானது அதனுடைய கொண்டு செல்லும் பெறுமதியிலிருந்து பொருண்மையாக வேறுபடுகின்ற போது மேலதிக மீள்மதிப்பீடானது அவசியமாகின்றது. இருந்த போதிலும், நிதியத்தால் சொந்தமாக்கப்பட்ட ரூபா 11,030,000 கிரயமான காணிகள் ரூபா 4,520,000 கிரயமான கட்டிடங்கள் 2008 ஆம் ஆண்டினைத் தொடர்ந்து மீள்மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டுடன் தொடர்புடைய ரூபா 10,145 பொழுதுபோக்குச் செலவினம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான முதலீடுகள் மீதான வட்டி வருமானம் ரூபா 99,872,801 தொகையானதுடன், இது கணக்காய்வாளர்களால் கணிப்பிடப்பட்ட கணப்பீடுகளின் பிரகாரம் ரூபா 101,600,942 ஆகவிருந்தமையால் ரூபா 1,728,141 தொகயைான விளக்கமளிக்கப்படாத விததியாசம் அவதானிக்கப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கு இடையிலான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 3(1) ஆம் பிரிவு | நிதியத்தினை ஸ்தாபித்த திகதியிலிருந்து ஆளுனர் சபைக் கூட்டங்களானது மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திறைசேரிச் சுற்றறிக்கைகள் | |
| (i) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய டீஎவ்/423 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின் 4.1(இ)பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட பாதீடொன்று இல்லாமல் உரிய நிதியாண்டின் போது எந்தவொரு செலவினமும் ஏற்படுத்தப்படமாட்டாது. இருந்த போதிலும், நிதியமானது மீளாய்வாண்டிற்காக பாதீடொன்றைத் தயாரித்திருக்காததுடன் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. |
| (ii) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | நிதியத்தின் நோக்கங்களை அடைதலில் எய்தப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. | 04 வகைப்படுத்தல்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட ரூபா 18,572,415 பெறுமதியான நிதியத்தின் நிலையான சொத்துக்கள் மீதான விபரங்களை உள்ளடக்கிய நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிசார் விளைவு ரூபா 95,979,933 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 66,392,540 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 29,587,393 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நலன்புரி செலவினம் ரூபா 4,883,280 ஆல் அதிகரித்திருந்த போதிலும் முதலீடுகள் மீதான வட்டி வருமானம் ரூபா 34,480,696 ஆல் அதிகரித்தமை என்பன நிதிசார் விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டின் ரூபா 80,688,937 தொகையான மிகையானது 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 48,440,571 வரை வீழ்ச்சியடைந்திருந்த அதேநேரம், ரூபா 95,979,933 மிகைக்கு அதிகரித்தது. எனினும், ஆளணி வேதனங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வை நிதிசார் விளைவுகளில் சீராக்கியதன் பின்னர் 2013 இல் இருந்த ரூபா 80,884,211 தொகையான நிதியத்தின் பங்களிப்பு 2015 ஆம் ஆண்டில் ரூபா 48,625,395 இற்கு குறைவடைந்தது. அதேநேரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் இது ரூபா 96,161,368 இற்கு அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடுகள் மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொலிஸ் படை அல்லது இராணுவப் படைகள் தங்களுடைய கடைமைகளை செய்யும் போது விபத்துக்குள்ளான அல்லது இறந்தால் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு செலுத்துகின்ற எந்தவொரு நன்மைகளின் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய தேசிய பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக மிகவும் சிறந்ததாக கருதப்படும் முறைமைகள் மற்றும் அத்தகைய செயற்பாடுகளிற்காக நிதியத்திற்குச் சொந்தமான பணங்களானது சனாதிபதியின் பணிப்புரைகளுக்கமைய பிரயோகிப்பது ஆளுனர் சபையின் பொறுப்பாகவிருக்கும். எனினும், அதிமேதகு சனாதிபதியின் பணிப்புரையின் கீழ் நிதியத்தின் செலவினத்திடமிருந்து ஏற்படுத்தப்பட்டிருந்தது என்பதற்கு எந்தவொரு சான்றுகளும், சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆளுனர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளின் ரூபா 377,254,358 கூட்டுத்தொகையான நிதியத்தின் வருமானத்தில் 0.04 சதவீதத்திலிருந்து 11 சதவீதமான ரூபா 18,745,265 கூட்டுத்தொகை மாத்திரம் நிதியத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. நிதியத்தின் நோக்கங்களிலிருந்து விலகுகையில், மிகையான நிதியங்களானது நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரிப் பட்டியலில் முதலிடப்பட்டிருந்ததுடன் முதலீடுகளின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 997,335,505 இற்கு அதிகரித்திருந்தது.

(இ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், இறந்த, காணாமல் போன, வலதுகுன்றிப் போன இராணுவப் படைகளின் எண்ணிக்கை 44,215 ஆக இருந்த போதும், கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஐந்தாம் வருட புலமைப் பரீட்சைக்கு தகுதி பெற்ற போர் படைவீரர்களின் 195 மாணவர்களிற்காக ரூபா 4,875,000 தொகையான சேமிப்பு வைப்புக்கள் பரிசானது மாத்திரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தால் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) இரண்டாந்தர நோக்கமாகவுள்ள தேசிய பாதுகாப்பை மேம்படுத்தி உறுதிப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அதிரசச்சட்டத்தின் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 ஆகஸ்ட் 17 இல் அமைச்சால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம், நிதியத்தின் வருமானத்தில் படைவீரரொருவர் ரூபா 750,000 ஐ செலவழிப்பதன் மூலம் 145 படைவீரர்களிற்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக மெத செவன பகுதியளவு வீடமைப்பு செயற்திட்டம் என அழைக்கப்பட்ட செயற்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக திட்டங்கள் வரையப்பட்டது. எனினும், 89 படை வீரர்களை தெரிவு செய்தல் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

நிதியத்தால் 2008 ஆம் ஆண்டிலிருந்து சொந்தமாக்கப்பட்ட 03 வீடுகள் இலங்கை படை வீரர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த அதேநேரம், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் இலங்கை படைவீரர்களுடன் குத்தகை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியிருந்த வாடகை ரூபா 2,400,000 தொகையானதுடன் அதில் ரூபா 1,200,000 தொகையொன்று 2016 ஆம் ஆண்டுடன் தொடர்பாக நிலுவையாகவுள்ள வாடகைகைய பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான பாதுகாப்பு அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் கீழ், அமைச்சால் உரிமையாக்கப்பட்ட நிதியங்களிலிருந்து 02 உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டங்கள் வரையப்பட்டிருந்தது. அதற்கான அறிக்கைகளின் பிரதிகள் நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் முகாமைத்துவத்திற்கு காலத்திற்கு காலம் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்** | | **அவதானிப்புக்கள்** |
| --- | --- | --- |
| (அ) கணக்கீடு | (i) | கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்காக தனியான தொகுதி கணக்குகளை பேணுவதற்கு பதிலாக, நிதியத்தால் குறிப்பு மாத்திரம் பராமரிக்கப்பட்டிருந்தது. |
| | (ii) | கணக்குகளிற்கான குறிப்புக்களானது, முதலீடுகள் மீதான வட்டி வருமானம் மற்றும் புலமைப்பரிசுகள் தொடர்பில் சேமிப்புக் கணக்குகளிற்கு திருப்பப்பட்ட பணம் தொடர்பில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | நிலையான சொத்துக்களை புரிவதற்கான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | 18 சொத்து, பொறுப்பு, வருமானம் மற்றும் செலவின கணக்குகளிற்காக பேரேட்டுக் கணக்குகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) செயற்பாட்டு முகாமைத்துவம் | | வாடகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கும் மற்றும் ஆளுனர் சபைகளின் கூட்டங்களை நடாத்துவதற்கும் தவறியமை. |

**இணைப்பு 01**

**2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய பாதுகாப்பு நிதியத்தின் வருமான மற்றும் செலவினக் கூற்று**

| | **2017** | **2016** |
| --- | --- | --- |
| **வருமானம்** | **ரூபா** | **ரூபா** |
| நன்கொடைகள் | - | 2,520 |
| முதலீடுகள் மீதான வட்டி | 99,872,801 | 65,392,105 |
| வாடகை வருமானம் | 1,200,600 | 1,200,000 |
| | 101,072,801 | 66,594,625 |
| **செலவினம்** | | |
| உத்தியோகத்தர்களிற்கான படிகள் | 32,400 | 17,400 |
| நலன்புரி செலவினம் | 4,911,432 | 28,152 |
| நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு | 149,036 | 156,533 |
| | 5,092,868 | 202,085 |
| செலவினத்திற்கு மேலான வருமானம் | 95,979,933 | 66,392,540 |

**இணைப்பு 02**

2017 ஆம் ஆண்டிலுள்ளவாறான தேசிய பாதுகாப்பு நிதியத்தின் பண முதலீடுகளின் கூற்று

| **கணக்கு இலக்கம்** | **முதலீட்டு நிறுவகம்** | **முதலீடுகளின் வகை** | **முதலீட்டுத் திகதி** | **முதலீடு காலப்பகுதி** | **2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|---|---|---|---|
| | | | | **ஆண்டு** | **ரூபா.** |
| 2 0065 12 19081 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2017 30 யூன் | 1 | 13,461,121 |
| 2 0065 12 19090 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2017 30 யூன் | 1 | 17,320,340 |
| 2 0065 12 19073 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2017 27 யூன் | 1 | 152,823,514 |
| 2 0065 11 78202 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2017 25 செப்தெம்பர் | 1 | 271,257 |
| 2 0065 11 86302 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2017 22 யூலை | 1 | 1,102,682 |
| 2 0065 12 17542 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2017 09 ஏப்ரல் | 1 | 13,172,334 |
| 2 0065 12 17569 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2017 24 மார்ச் | 1 | 90,665,893 |
| 2 0065 12 19057 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2017 27 யூன் | 1 | 111,256,821 |
| 2 0065 12 19065 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2017 27 யூன் | 1 | 130,138,204 |
| 1098429 | இலங்கை வங்கி | நிலையான வைப்பு | 2017 09 மே | 1 | 63,087,334 |
| 2 0001 2248549 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2017 07 சனவரி | 1 | 1,493,380 |
| 1168699 | இலங்கை வங்கி | நிலையான வைப்பு | 2017 12 செப்தெம்பர் | 1 | 163,590,119 |
| 2 00651025058 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2017 31 மார்ச் | 1 | 400,000 |
| 2 0149 01 00129 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2017 14 யூலை | 1 | 103,195,653 |
| 1168744 | இலங்கை வங்கி | நிலையான வைப்பு | 2017 21 செப்தெம்பர் | 1 | 135,148,752 |
| எல்கேஏ09118பீ023 | தேசிய சேமிப்பு வங்கி | திறைசேரி பட்டியல் | 2017 29 திசெம்பர் | ஒரு மாதம் | 208,101 |
| **மொத்தம்** | | | | | **997,335,505** |